1971 ஜூலை 28]

அரசு ஊழியர்களுக்கு மருத்துவப்படி

* 509 வினு—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களுக்கு மருத்துவச் செலவுப்படி (Medical Allowance) வழங்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனின், அது எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தலைவரவர்களே, அரசு ஊழியர்களுக்கு மருத்துவச் செலவுப்படி வழங்கும் திட்டம் இல்லை. ஆகவே, அந்தக் கேள்வி எழவில்லை.

(இ) மருத்துவச் செலவுப்படி வழங்கும் திட்டம் இல்லாமலே இப்போது அரசாங்கம் ஊழியர்களின் நிலைமைக்கேற்ப மருத்துவச் செலவு நிதி வழங்கப்படுகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, அரசாங்க ஊழியர்களில் சிலர் தான் இந்த மருத்துவப் படியைப் பெறுகிருர்கள். அதாவது டாக்டரிடத்தில் சென்று மருந்து வாங்கி, அதற்கான செலவை அரசாங்கத்திலிருந்து பெற்றுக் கொள்கிருர்கள். இதை வாய்ப்புள்ள சிலர்தான் பெற்றுக் கொள்கிருர்கள். வாய்ப்பு இல்லாதவர்கள் அதைப் பெற முடியவில்லை. ஏனெனில் அங்கே ஆதரைஸட் மெடிகல் அட்டென்டென்ட் இருப்பது இல்லை. ஆகவே சராசரியில் அரசாங்கமே செலவைப் பங்கிட்டு ஒரு அரசாங்க ஊழியருக்கு ரூ. 5-10 என்று கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர்வர்களே, இது ஒரு தவருன கருத்து. நோய் சராசரியாக வருவது இல்லை. பாதிக்கப்படுபவர்களுக்கு ஆகும் செலவையும் சராசரியாகக் கணக்கிட்டுக் கொடுக்க முடியாது. வியாதியின் அளவையும் சராசரியாகத் தீர்மானிக்க முடியாது. செலவையும் சராசரியாகக் கணக்கிட முடியாது. இந்த அரசாங்கம் நோயவாய்ப்படுபவர்களைச் சராசரியாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தயாராக இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்த மருத்துவ வசதி ஓய்வு பெற்ற சர்க்கார் ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதே, அது அமுல் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : குறிப்பு இப்போது இல்லை.

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை

* 510 வினு—திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூரிலுள்ள, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்டுக்கும், அதன் தொழிலாளர் சங்கத்திற்குமிடையே, ஊதியங்கள், பூரிப்பூதியங்கள் ஆகியவை குறித்து 18—8—69 அன்று ஏற்பட்ட உடன்பாடு செயல்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில், அதன் காரணம் என்ன ?

[1971 ஜூலை 28

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) பணியாளர்களுக்கு ஊதியங்களை மாற்றியமைத்தல் குறித்து, 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் 18—8—69-ஆம் நாளிட்ட உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டில் பூரிப்பூதியம் குறித்து வகை எதும் செய்யப் படவில்லை. இவ்வுடன்பாடு செயல்படுத்தப்படவில்லை.

(இ) தலைவர், தங்களது இசைவு இன்றிச் செயல்பட்டுவிட்டார் எனக் காரணங்காட்டி, இயக்குநர் குழு இவ்வுடன்பாட்டில் கையெழுத்திட்டு உறுதி செய்யவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, 18—8—1969 அன்று ஏற்பட்ட உடன்பாடு சட்டரீதியான உடன்பாடுதானா? அதன் ஷரத்துக்கள் என்னென்ன? என்னென்ன பகுதிகள் அமுலாக்கப் பட்டிருக்கிறது, என்னென்ன பகுதிகள் அமுலாக்கப்படவில்லை என்பதையும் அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஊதிய உயர்வு பற்றிய உடன்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

Illicit drinks seized in Madras.

* 493 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether a large quantity of illicit drinks was seized from Harbour area and Choolaimedu in Madras City about the 10th October 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) & (இ) 1970-ம் ஆண்டு அக்டோபர் 10-ம் நாள் துறைமுகப்பகுதியிலோ அல்லது சூளைமேட்டிலோ கள்ளச்சாராயம் எதுவும் கைப்பற்றப் படவில்லை. இருப்பினும், 9—10—70 அன்று காலையில் துறைமுக இன்ஸ்பெக்டரும், அவருடைய காவல்படையும் எம்.டி.ஒய். 7559 எண்ணுள்ள காரை இராயபுரம் இருப்புப்பாதை சாலைக்கடவில் இடைமறித்து காரின் பின் பகுதியில் 4 கோணிகளில் மறைத்து வைக்கப் பட்டிருந்த 115 ஜானிவாக்கர், ரெட் லேபிள், ஸ்காட்ச் விஸ்கி புட்டிகளைக் கைப்பற்றினார்கள் என்று காவல் துறை கமிஷனர் தெரிவித்துள்ளார்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, கள்ளச்சாராயம் மலிந்த இந்தக் காலத்தில், கள்ளுக்கடையை எதிர்த்து காந்தியாக மாறப்பார்க்கிறார்களோ, அதைப் பற்றி அரசு என்ன கருதுகிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைப் பற்றி அரசு எதுவும் கருதவில்லை (சிரிப்பு).

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், வெளிநாட்டுச்சாராயம் இவை என்று தெரிகிறது. அப்படியானால், இது லைசென்ஸ் பெற்று இந்தமாதிரிக் கொண்டு வந்தார்களா அல்லது எப்படிக் கொண்டு வந்தார்கள்?